# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM

| | | |
|---|---|---|
| Calender | : | CC .No. 05/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W. 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நிக்சன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கோயில்ராஜ் | ஜாதி | : | |
| கிராமம் | : | கோயம்புத்தூர் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 16.05.2024.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். கடந்த 09.01.2021ம் தேதியன்று அதிகாலை சுமார் 04.40 மணிக்கு நான் கோயம்புத்தூரிலிருந்து கரூர்செல்ல வேண்டி கோவை-திருச்சி மெயின் ரோட்டில் காங்கயத்தை அடுத்து ஓலப்பாளையம் என்ற இடத்தில் எனது காரில் சென்றபோது அங்கு ரோட்டில் இடதுபுறமாக நின்றிருந்த லாரி மீது மோதியதில் வலதுபுறமாக திரும்பி தென்புற ரோட்டை தாண்டி மண் ரோட்டில் சென்று எனது வண்டியை நிறுத்திவிட்டேன்.

2. பின்பு நான் காரிலிருந்து வெளியே வந்து சுமார் 5 நிமிடம் நின்றிருந்தேன். அந்த சமயம் நான் வந்தது போலவே காங்கயம் பக்கமிருந்து கிழக்கு நோக்கி வந்த மற்றொரு கார் அங்கு நின்று கொண்டிருந்த லாரியின் பின்பக்கமாக மோதி விட்டது. அந்த விபத்தில் அந்த காரில் வந்தவர்களில் முன் இருக்கையில் இருந்த இரண்டு நபர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துபோய்விட்டார்கள். அந்த காரின் பின் இருக்கையில் இருந்த ஒரு நபர் மற்றும் இரண்டு குழந்தைகளை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். பின்பு நான் இது சம்மந்தமாக வெள்ளகோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள

கையெழுத்து என்னுடையது தான், அந்த **புகார் மனு அ.சா.ஆ.1. ஆகும்.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. விபத்து நடந்த இடத்தில் 2 மின் கம்பங்கள் இருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திலிருந்து 10 அடி தூரத்தில் ஒரு ஓட்டல் கடை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு வடபுறத்தில் ஒரு பள்ளிக்கூடம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த இடத்திலிருந்து வடபுறமாக ஒரு பிரிவு தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த பிரிவு ரோட்டிலிருந்து மெயின் ரோட்டிற்கு வந்து திருச்சி செல்லும் வாகனம் செல்லும் என்றால் சரிதான். பிரிவு ரோட்டிலிருந்து வரும் வாகனங்களுக்கு வழிவிடும் விதமாக மெயின் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக வரும் வாகனங்கள் மெதுவாக தான் வரவேண்டும் என்றால் சரிதான்.

2. விபத்து சமயம் அதிக பனிமூட்டம் இருந்தது என்றால் சரிதான். பனிமூட்டம் என்பதால் வாகனங்கள் மிதமான வேகத்தில் தான் வரும் என்றால் சரிதான். அந்த பனிமூட்டத்தில் லாரியின் ஓட்டுனர் லாரியை மிதமான வேகத்தில் தான் ஓட்டி சென்று கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. விபத்து சமயம் லாரியில் லோடுகள் இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு லோடு ஏற்றி கொண்டு வரும் லாரிகள் பின்புறமாக வரும் வாகனங்களுக்கு வழிவிடவேண்டி அந்த ரோட்டின் இடதுபுறமாக தான் செல்லும் என்றால் சரிதான்.

3. எதிரி ஓட்டி சென்ற லாரியின் பின்புற விளக்கானது பிரேக் போடும் சமயத்தில் தான் எரியும் என்றும், ஆனால் எதிரி ஓட்டி சென்ற லாரியின் பிரேக்கை போடாமல் லாரி ஓடிக் கொண்டிருந்ததால் தான் பின்புற விளக்கு விபத்து சமயம் எரியாமல் தான் இருந்தது என்றால் சரியல்ல. அதனால் லாரி பிரேக் டவுன் ஆகி எந்தவொரு சமிக்ஞையும் செய்யாமல் நின்று கொண்டிருந்தது என்றால் சரியல்ல. நான் காரில் வந்தபோது எதிரே லாரி நின்றிருப்பதை திடீரென்று பார்த்தவுடன் சுதாரித்துக் கொண்டு எனது காரை பிரேக்போட்டு நிறுத்தினேன், இருந்தும் எனது காரின் முன்இடது புற பேனட் மோதி வலதுபுறமாக எனது கார் திரும்பி விட்டது.

4. விபத்தில் இறந்து போன நபர்கள் வந்த காரானது அதிகமான வேகத்துடன் வந்து எதிரே செல்லும் வாகனத்தை கவனிக்காமல் லாரியின் பின்புறத்தில் மோதி வழிய விபத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அவர்கள் மிதமான வேகத்தில் வந்திருந்தால்இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. லாரியானது என்ன காரணத்திற்காக நின்று கொண்டிருந்ததால் தான் லாரி பிரேக் டவுன் ஆகி நின்றிருந்தது. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

5. விபத்து சமயம் விடியற்காலை நேரம் என்பதால் வாகனத்தை ஓட்டி வந்த மயில்சாமி என்பவர் தூங்கி கொண்டு வந்து லாரியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக புகார் அளிக்கப்பட்டு, அதன்படி பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதன்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed/before me in open Court read over/interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2024.05.16 16:57:21 +0530

Judicial Magistrate
Kangayam.